அக்டோபர்
2019

விண்மீன்.காம்

# மூன்றாவது வார நடப்பு நிகழ்வுகள்

15 அக்டோபர் – 21 அக்டோபர்

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

1.எந்த மாநிலத்தில், 10ஆவது தேசிய கலாசார விழா நடைபெறுகிறது?

A) இராஜஸ்தான்

B) ஹிமாச்சலபிரதேசம்

**C) மத்தியபிரதேசம் ☑**

D) உத்தரபிரதேசம்

✓ மத்திய பிரதேசத்தில், இராஷ்டிரிய சமற்கிருத மகோத்சவம் – தேசிய கலாச்சார விழாவின் 10ஆவது பதிப்பு அக்.14–21 வரை ஜபல்பூர், சாகர் மற்றும் ரேவாவில் நடைபெறும். 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்னும் பரப்புரையின் கீழ், மத்திய கலாசார அமைச்சகத்தால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்த விழாவில், 22 மாநிலங்களின் நாட்டுப்புறக்கலை, கலை மற்றும் கலாசாரத்தின் பல்வேறு வடிவங்கள் காண்பிக்கப்படும். இது லே, உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப் & மேற்கு வங்கத்தின் கலை, நாட்டுப்புற இசை, நடனம், கைவினைப்பொருட்கள் மற்றும் உணவு வகை ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும்.

2. 'South Asia Economic Focus, Making (De) Centralization Work" என்னும் தனது அண்மைய அறிக்கையை வெளியிட்டுள்ள சர்வதேச அமைப்பு எது?

A) சர்வதேச நாணய நிதியம்

**B) உலக வங்கி ☑**

C) ஆசிய வளர்ச்சி வங்கி

D) ஐக்கிய நாடுகள் அவை

✓ உலக வங்கி அண்மையில், 'South Asia Economic Focus, Making (De) Centralization Work' என்ற தலைப்பில் தனது அறிக்கையை வெளியிட்டது. அறிக்கையின்படி, பூட்டானுக்குப் பிறகு தெற்காசியாவில் வேகமாக வளர்ந்துவரும் இரண்டாவது பொருளாதாரமாக வங்கதேசம் மாறியுள்ளது.

✓ ஒரு வலுவான பொருளாதார கட்டமைப்பு, அரசியல் நிலைத்தன்மை மற்றும் வலுவான பொதுத்துறை முதலீடுகள் ஆகியவற்றின் ஆதரவில் வங்கதேசம் தனது பொருளாதார வளர்ச்சியை 7 சதவீதத்துக்கும் மேல் தக்கவைத்துக் கொள்ளும் என இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. நிதித்துறை பாதிப்பு, நிதியியல் அழுத்தங்கள் மற்றும் வெளிப்புற போட்டித்திறன் இழப்பு ஆகியவை அதன் வளர்ச்சி விகிதத்திற்கு சவால்களை ஏற்படுத்துகின்றன என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

3.சிமோன் பைல்ஸ், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?



A) மல்யுத்தம்

B) குத்துச்சண்டை

C) பளு தூக்குதல்

**D) சீருடற்பயிற்சி (Gymnastics) ☑**

✓ உலக சாம்பியன்ஷிப் வரலாற்றிலேயே அதிக பதக்கங்களை வென்ற ஜிம்னாஸ்டிக் வீராங்கனையாக உள்ளார் அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ் (22). ஜெர்மனியின் ஸ்டட்கர்ட் நகரத்தில் நடந்த இறுதிச் சுற்றில் ஒட்டுமொத்தமாக 25 பதக்கங்களை வென்று, ஏற்கனவே பெலாரஸ் வீராங்கனை விடாலி செர்போவின் 23 பதக்கங்கள் சாதனையை சிமோன் பைல்ஸ் முறியடித்தார். புளோர் பிரிவிலும் தனது சாம்பியன் பட்டத்தை அவர் வெற்றிகரமாக தக்கவைத்துக்கொண்டார்.

4.நடப்பாண்டில் வரும் உலக பெண்குழந்தை நாளுக்கான கருப்பொருள் என்ன?

A) With Her: A Skilled Girl Force

**B) Girl Force: Unscripted and Unstoppable ☑**

C) Empower Girls: Before, during and after crises

D) Girls' Progress = Goals' Progress



✓ பெண் குழந்தைகளுக்கான உரிமைகளை நிலைநாட்ட, அவர்களுக்கான அதிகாரத்தைப் பெற மற்றும் அவர்களின் சாதனைகளைக் கொண்டாடுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.11 அன்று உலக பெண் குழந்தை நாள் கொண்டாட்டப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Girl Force: Unscripted and Unstoppable" என்பதாகும்.

5. "Ex வஜ்ர பிரஹார்" என்பது இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சி?

**A) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**

B) ஜப்பான்

C) ஜெர்மனி

D) இலங்கை



✓ இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான "வஜ்ர பிரஹார்" என்னும் கூட்டு இராணுவப் பயிற்சியின் பத்தாவது பதிப்பானது அக்டோபர்.13–28 வரை சியாட்டிலில் உள்ள லூயிஸ் – மெக்கார்ட் தளத்தில் நடைபெறுகிறது. இருநாட்டு சிறப்புப் படைகளுக்கு இடையேயான இந்தக் கூட்டுப்பயிற்சி, இந்தியாவிலும் அமெரிக்காவிலும் மாறி மாறி நடத்தப்படுகிறது.

6.பிரேசிலில் நடந்த 2019 BRICS கலாசார அமைச்சர்கள் கூட்டத்தில், இந்திய தூதுக்குழுவிற்கு தலைமைதாங்கியவர் யார்?

A) ஸ்மிருதி இராணி

B) நிர்மலா சீதாராமன்

**C) பிரகலாத் சிங் படேல் ☑**

D) அமித் ஷா



✓ பிரேசிலின் குரிட்டிபாவில் நடந்த 2019 BRICS கலாசார அமைச்சர்கள் கூட்டத்தில், மத்திய கலாசார & சுற்றுலாத்துறை இணையமைச்சர் பிரகலாத் சிங் படேல் பங்கேற்றார். உறுப்பு நாடுகளுக்குகிடையே –யான பிணைப்பை வலுப்படுத்துவதில் இந்தியாவின் பங்களிப்பை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினா –ர். மேலும், இலக்கியப் படைப்புகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புப் புலமாக இலக்கியத்தைச் சேர்க்கவும் அவர் முன்மொழிந்தார்.


**7.** 2018–19ஆம் ஆண்டிற்கான தேசிய கிஷோர் குமார் சம்மனைப் பெற்றுள்ளவர் யார்?

A) வகீதா ரெஹ்மான்

B) அமிதாப் பச்சன்

**C) பிரியதர்ஷன் ☑**

D) ஷாருக்கான்



✓ அக்.13 அன்று பிரபல இயக்குநரும் தயாரிப்பாளருமான பிரியதர்ஷனுக்கு 2018–19ஆம் ஆண்டுக்கான தேசிய கிஷோர் குமார் சம்மன் வழங்கப்பட்டது. அதிகாரப்பூர்வ தகவலின்படி, கிஷோர் குமார் சம்மன் நடுவர் குழுவானது 2017–18ஆம் ஆண்டுக்கான விருதுக்கு பிரபல நடிகர் வகீதா ரெஹ்மானை தேர்வு செய்துள்ளது. இந்த விருதை மத்திய பிரதேச அரசின் கலாசாரத்துறை நிறுவியுள்ளது. இது ₹2 இலட்சம் ரொக்கப்பரிசையும் பாராட்டுப்பத்திரத்தையும் உள்ளடக்கியது.

✓ 1987 அக்.13 அன்று காலமான கிஷோர் குமார், ஹிந்தி திரைத்துறையின் மிகவும் பிரபலமான மற்றும் வெற்றிகரமான பாடகர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார்.

**8.** 'தி டான்' விருது என்பது எந்த நாட்டின் விளையாட்டுத் துறையில் வழங்கப்படும் மிகவுயரிய தனிநபர் விருதாகும்?

A) இங்கிலாந்து

**B) ஆஸ்திரேலியா ☑**

C) நியூசிலாந்து

D) தென்னாப்பிரிக்கா




✓ ஆஷ்லீ பார்டி, வருடாந்திர ஸ்போர்ட் ஆஸ்திரேலியா ஹால் ஆஃப் ஃபேமில், 'The Don' விருதை வென்றுள்ளார். மேலும், தற்போது ஆஸ்திரேலியாவின் சிறந்த விளையாட்டு வீரராகவும் அவர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். 2019 பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியில் வென்ற அவர், தற்போது உலகின் முதலிடத்தில் உள்ள WTA வீராங்கனையாவார்.

✓ 2001ஆம் ஆண்டில் இந்த விருதை வென்ற பாட் ராப்டருக்குப் பிறகு, இம்மதிப்புமிக்க விருதை வென்ற இரண்டாவது டென்னிஸ் ஆளுமை என்ற பெருமையை பார்டி பெற்றுள்ளார். 'தி டான்' விருது என்பது ஆஸ்திரேலிய நாட்டின் விளையாட்டுத்துறையில், தனிநபருக்கு வழங்கப்படும் மிகவுயரிய விருதாகும்.

9.எந்தத் தேதியில், நடப்பாண்டின் சர்வதேச பேரிடர் இன்னல் குறைப்பு நாள் (International Day for Disaster Reduction) கடைப்பிடிக்கப்பட்டது?




A) அக்டோபர் 14

**B) அக்டோபர் 13** ☑

C) அக்டோபர் 12

D) அக்டோபர் 11

✓ பேரிடர் இன்னல் குறைப்புபற்றி பன்னாட்டளவில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் அக்.13 அன்று சர்வதேச பேரிடர் இன்னல் குறைப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. உலக மக்கள் தங்களுக்கு ஏற்படும் பேரிடர் இன்னல்களை எங்ஙனம் குறைத்துக்கொள்கிறார்கள் என்பதையும் அதுகுறித்து எவ்வாறு விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்கள் என்பதையும் இந்த நாள் கூறுகிறது.

✓ நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Reduce disaster damage to critical infrastructure and disruption of basic services" என்பதாகும். இது, பேரிடர் இன்னல் குறைப்புக்கான செண்டாய் கட்டமைப்பின் இலக்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

10.கேரள சர்வதேச திரைப்பட விழாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 'பினிசுடோய் – Binisutoy' எந்த மொழியுடன் தொடர்புடையது?

**A) பெங்காலி** ☑




B) மராத்தி

C) காசி

D) ஹிந்தி

✓ தேசிய விருது வென்ற இயக்குநர் அதானு கோஷின் வரவிருக்கும் பெங்காலி மொழி திரைப்படமான 'பினிசுடோய்', கேரள சர்வதேச திரைப்பட விழாவிற்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளது. 'பினிசுடோய்' தவிர, திருவிழாவின் 'இந்திய சினிமா நவ்' பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற 6 படங்கள்: ஆனந்தி கோபால் (மராத்தி), ஆக்சோன் (ஹிந்தி / ஆங்கிலம்), மைகாட்: குற்றம் எண் 103/2005 (மராத்தி), ஹெலாரோ (குஜராத்தி), சந்தை / லெது (காசி), மற்றும் இறுதி ஊர்வலம் / இராம்பிரசாத் கி தேர்வி (ஹிந்தி).

✓ ஒவ்வோர் ஆண்டும், கேரளாவின் மதிப்புமிக்க சர்வதேச திரைப்பட விழாவின், 'இந்திய சினிமா நவ்', 7 குறிப்பிடத்தக்க இந்திய திரைப்படங்களை மட்டும் கொண்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.புனைகதைக்கான நடப்பாண்டின் மேன் புக்கர் பரிசை வென்ற முதல் கறுப்பின பெண் யார்?**



A) எலினோர் கேட்டன்

B) மார்கரெட் அட்வுட்

C) அன்னே என்ரைட்

**D) பெர்னார்டின் எவரிஸ்டோ (Bernardine Evaristo) ☑**

- ✓ மார்கரெட் அட்வுட் மற்றும் பெர்னார்டின் எவரிஸ்டோ ஆகியோர் 2019ஆம் ஆண்டுக்கான மேன் புக்கர் பரிசை வென்றுள்ளனர். புக்கர் விதிகள் பரிசைப் பிரிக்கக்கூடாது எனக் கூறுகின்றன, ஆனால் நீதிபதிகள் அட்வுட்டின் 'தி டெஸ்டமென்ட்' மற்றும் பெர்னார்டின் எவரிஸ்டோவின் 'கேர்ள், வுமன், அதர்' இவை இரண்டையும் "பிரிக்க முடியாது" என்று வலியுறுத்தினர். £50,000 பவுண்டுகள் மதிப்பிலான இவ்விருதை ஆசிரியர்கள் இருவரும் பகிர்ந்துகொள்வார்கள்.
- ✓ இந்த மதிப்புமிக்க விருதை வென்ற முதல் கறுப்பின பெண் எவரிஸ்டோ என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல 79 வயதில் இவ்விருதை வென்றதன் மூலம் மேன் புக்கர் பரிசு பெறும் மூத்தவர் என்ற அடையாளத்தைப் பெற்றிருக்கிறார் மார்க்கரெட் அட்வுட்.

**2. A-320 விமானத்தில் டாக்ஸிபோட்டைப் பயன்படுத்திய உலகின் முதல் விமான நிறுவனம் எது?**



A) அலாஸ்கா ஏர்லைன்ஸ்

**B) ஏர் இந்தியா ☑**

C) நிக்கோ

D) ஹவாயன் ஏர்லைன்ஸ்

- ✓ ஏர் இந்தியா நிறுவனமானது விமானம் நிறுத்துமிடத்திலிருந்து ஓடுதளத்துக்கு விமானத்தை இழுத்து வரும் 'டாக்ஸிபோட் – Taxibot' என்ற ரோபோவை முதல்முறையாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. உலகிலேயே 'டாக்ஸிபோட்' ரோபோவை பயன்படுத்தும் முதல் விமான சேவை நிறுவனம் ஏர் இந்தியா. A-320 விமானத்தில் பயணிகள் இருக்கும்போதே இதனை பயன்படுத்தியுள்ளது.
- ✓ ஏர் இந்தியா தலைவரும் மேலாண்மை இயக்குநருமான அஸ்வினி லோகானி தில்லியிலிருந்து மும்பை செல்லும் விமானத்தில் இந்த வசதியைக் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். அப்போது, AI665 விமானம், தில்லி விமான நிலையத்தின் மூன்றாவது வாயில் பகுதிக்கு 'டாக்ஸிபோட்' மூலம் ஓடுதளத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இது, புறப்படும் விமானங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும். ஒரு விமானி மூலம் கட்டுப்படுத்தப்படும் இது, விமானத்தை ஓடுதளத்துக்குக் கொண்டுவருவதற்கான ஒரு மாற்றுவழியாக இருக்கும்.

**3. 2019 பஹ்ரைன் சர்வதேச தொடர் பாட்மிண்டனில் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்ற இந்திய வீரர் யார்?**

A) லக்ஷ்யா சென்

**B) பிரியான்ஷு ராஜாவத் ☑**

C) வெங்கட் கௌரவ் பிரசாத்

D) கிடாம்பி ஸ்ரீகாந்த்



✓ ஈசா நகரத்தில் நடந்த 2019 பஹ்ரைன் சர்வதேச தொடர் பாட்மிண்டன் போட்டியில் இந்திய வீரர் பிரியான்ஷு ராஜாவத், ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். இறுதிப்போட்டியில் 16–21, 21–7, 21–12 என்ற செட்கணக்கில் கனடாவைச் சேர்ந்த ஜேசன் அந்தோனி ஹோ–ஷுவை அவர் வீழ்த்தினார். இந்திய கலப்பு இரட்டையர் இணை – ஜூஹி தேவாங்கன், வெங்கட் கௌரவ் பிரசாத் ஆகியோரும் முதலிடத்தைப் பிடித்தனர். பெண்கள் ஒற்றையர் பிரிவில், ஈரா ஷர்மா 2ஆவது இடத்தைப் பிடித்தார்.

**4.அண்மையில், எந்தத் தேதியில், உலக கிராமப்புற பெண்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டது?**

A) அக்டோபர் 19

**B) அக்டோபர் 15 ☑**

C) அக்டோபர் 17

D) அக்டோபர் 16




✓ கிராமப்புற குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துதல், கிராமப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் ஒட்டுமொத்த நலனை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில் பெண்கள் மற்றும் சிறுமியரின் முக்கியப்பங்கை அங்கீகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.15 அன்று உலக கிராமப்புற பெண்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Rural women and girls building climate resilience" என்பதாகும்.

**5.அண்மையில் காலமான அலெக்ஸி லியோனோவ், எந்த நாட்டைச் சேர்ந்த பிரபல விண்வெளி வீரர்?**

**A) இரஷ்யா ☑**

B) ஜப்பான்

C) தென் கொரியா

D) ஐக்கிய அமெரிக்க நாடுகள்




✓ சோவியத் இரஷ்ய விண்வெளி வீரரான அலெக்ஸி லியோனோவ் (85), அக்.11 அன்று மாஸ்கோவில் காலமானார். இவர், 1965இல் வோஸ்கோட்–2 விண்கலத்தைவிட்டு வெளியேறி 12 நிமிடங்கள் 9 வினாடிகள் விண்வெளியில் நடந்து சாதனை படைத்தார்.

**6.இந்திய மருந்து கூட்டணியின் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் யார்?**



A) ராஜேஷ் ஜெயின்

B) வேணு சீனிவாசன்

**C) K சதீஷ் ரெட்டி ☑**

D) V A ராஜ்கிஷோர்

✓ டாக்டர்.ரெட்டியின் தலைவரான K சதீஷ் ரெட்டி, 2019–2021ஆம் ஆண்டுக்கான இந்திய மருந்து கூட்டணியின் (Indian Pharmaceutical Alliance – IPA) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். IPA, ஆராய்ச்சி அடிப்படையிலான தேசிய மருந்து நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**7.வறுமை குறித்த ஆய்வுக்காக 2019ஆம் ஆண்டுக்கான நோபல் பொருளாதார பரிசை வென்ற இந்திய பொருளாதார வல்லுநர் யார்?**

**A) அபிஜித் பானர்ஜி ☑**



B) அரவிந்த் சுப்பிரமணியன்

C) பிரணாப் பர்தான்

D) ஸ்ரீஜித் முகர்ஜி

✓ நடப்பாண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு இந்திய–அமெரிக்கப் பொருளாதார வல்லுநர் அபிஜித் பானர்ஜி, பிரான்ஸ் வம்சாவளி அமெரிக்கரான எஸ்தர் டப்லோ, அமெரிக்கப் பொருளாதார வல்லுநர் மைக்கேல் கிரெமர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அபிஜித் பானர்ஜி, எஸ்தர் டப்லோ ஆகியோர் கணவர்–மனைவியாவர். பன்னாட்டளவில் வறுமையை ஒழிப்பதற்காக அவர்களது பொருளாதார ஆய்வு சிறப்பாக உதவியதை கௌரவித்து நோபல் பரிசுக்கு அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

✓ அபிஜித் பானர்ஜி, கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பட்டப்படிப்பு முடித்த பின்னர், தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலையில் பொருளாதாரத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றார். அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலையில், 1988ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார். வளர்ச்சிப் பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றவரான பானர்ஜி, தற்போது மாசசூசெட்ஸ் ஆய்வுக் கல்வி நிறுவனத்தில் பொருளாதாரப் பேராசிரியராக உள்ளார்.

✓ எஸ்தர் டஃப்லோ, பொருளாதாரத்துக்கான நோபல் பரிசைப் பெறும் இரண்டாவது பெண் (முதலாமவர் எலினோர் ஆஸ்டர்ம் (2009)). மேலும், மிக இளம்வயதில் (46) பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பெறுபவர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்துள்ளது. இந்த நோபல் பரிசுடன் 9,18,000 அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ரூ. 6.53 கோடி), தங்கப்பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவையும் அடங்கும். பரிசுத் தொகை மூவருக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படும்.

**8.புதிய மத்திய சட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**




A) சுரேஷ் சந்திரா

**B) அனூப் குமார் மெண்டிரட்டா ☑**

C) அலோக் ஸ்ரீவஸ்தவா

D) P S ஜோஷி

✓ 2023 மார்ச் 30 வரை ஒப்பந்த அடிப்படையில் மத்திய சட்ட அமைச்சகத்தின் புதிய சட்ட செயலாளராக (செயலாளர், சட்ட விவகாரங்கள்) அனூப் குமார் மெண்டிராட்டா நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர், தில்லியின் கர்கார்டூமா நீதிமன்றங்களின் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியாக (வட கிழக்கு) உள்ளார். அதிகாரிகளின் கூற்றுப்படி, பணியிலிருக்கும் ஒரு நீதிபதி சட்டசெயலாளராக நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

**9.அண்மையில், சங்கம் இளையோர் விழாவை ஏற்பாடு செய்த இந்திய ஆயுதப்படை எது?**




A) இந்திய கடலோர காவல்படை

B) இந்திய வான்படை

**C) இந்திய இராணுவம் ☑**

D) இந்திய கடற்படை

✓ அமைதி, செழிப்பு, வகுப்புவாத நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பின் செய்தியை பரப்பும் ஒரு முயற்சியாக ஜம்மு–காஷ்மீரில் உள்ள பதர்வாவில் இந்திய இராணுவத்தால் சங்க இளையோர் விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விழாவில் 32 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச்சேர்ந்த 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

**10.துனிசியாவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**



**A) கைஸ் சையத் (Kais Saied) ☑**

B) நபில் கரோய்

C) யூசெப் சாஹெத்

D) முகமது என்னாசூர்

✓ நடந்து முடிந்த 2019 துனிசிய ஜனாதிபதித் தேர்தலில் அடைந்த மகத்தான வெற்றியைத் தொடர்ந்து, ஓய்வுபெற்ற கல்வியாளர் கைஸ் சையத் துனிசியாவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 36 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ்நாட்டிலிருந்து இலங்கையின் யாழ்ப்பாணத்திற்கு விமானசேவை தொடங்கப்பட்டுள்ளது. ஏர் இந்தியா நிறுவனத்தின் அலையன்ஸ் ஏர் விமானம் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றது. முன்னதாக, இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனா மற்றும் பிரதமர் இரணில் விக்ரமசிங்கே ஆகியோர் இணைந்து தரமுயர்த்தப்பட்டு 'யாழ்ப்பாணம் பன்னாட்டு விமான நிலையம்' என பெயர் சூட்டப்பட்ட பலாலி உள்நாட்டு வானூர்தி நிலையத்தை திறந்துவைத்தனர்.
- டாக்டர் எம்ஜிஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம் சார்பில் வரும் அக்.20 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் K பழனிசாமிக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படவுள்ளது.
- விபத்து மற்றும் இயற்கை இடர்பாடுகளில் சிக்குபவர்களை உரிய நேரத்தில் மருத்துவமனைகளில் சேர்ப்பதற்காக வெளிநாடுகளில் ஹெலிகாப்டர் அவசர ஊர்தி சேவை உள்ளது. இதேபோன்று தமிழ்நாட்டிலும் விரைவில் ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இதற்கென, தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் தலைமை மருத்துவமனைகளில் ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**

A) K M சந்திரசேகர்

**B) அமித் கரே ☑**

C) ராஜீவ் கௌபா

D) N R பிள்ளை




✓ தகவல் & ஒலிபரப்புத்துறை செயலாளர் அமித் கரே IAS அவர்களுக்கு (ஜார்க்கண்ட்: 1985) மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையின் செயலாளர் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. உயர்கல்வித்துறையானது இடைநிலை மற்றும் இடைநிலைக்குப் பிந்தைய கல்விக்குப் பொறுப்பாகும். 1956ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு சட்டத்தின் பிரிவு 3இன் கீழ், பல்கலைக்கழக மானியக்குழுவின் ஆலோசனையின் பேரில், கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக்கழக அந்தஸ்தை வழங்குவதற்கான அதிகாரம் இதற்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.நடப்பாண்டு பட்டினி ஒழிப்பு நாடுகளின் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

A) 84ஆவது

B) 112ஆவது

**C) 102ஆவது ☑**

D) 93ஆவது




✓ மக்கள் பட்டினியுடன் வாழும் நாடுகளின் பட்டியலில், நடப்பாண்டில் 117 நாடுகளுள் இந்தியா 102ஆவது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில், இந்தியா, கடந்த ஆண்டு (2018) 95ஆவது இடத்திலிருந்தது. அயர்லாந்தைச்சேர்ந்த 'கான்செர்ன் வேர்ல்ட்வைட்' என்கிற அமைப்பும், ஜெர்மனியின் 'வெல்ட் ஹங்கர் ஹில்பே' என்கிற அமைப்பும் இணைந்து நடப்பாண்டுக்கான தரவரிசைப்பட்டியலை தயாரித்துள்ளன.

✓ ஊட்டச்சத்து குறைபாடு, போதிய உணவு கிடைக்காமை போன்ற காரணங்களால் சிறார்கள் பாதிக்கப்படுவது, வயதுக்கேற்ற உயரம் இல்லாதது, உடல் மெலிந்து காணப்படுவது, 5 வயதுக்குட்பட்ட சிறார்களின் இறப்பு விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு பட்டினி ஒழிப்பு தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

✓ 100 புள்ளிகளைக்கொண்ட இப்பட்டியலில் குறைவான புள்ளிகள் எடுக்கும் நாடுகள் பட்டினி ஒழிப்பில் சிறப்பாக செயல்படுவதாகவும், அதிக புள்ளிகள் எடுக்கும் நாடுகள் பட்டினி ஒழிப்பில் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும் கணக்கிடப்படுகிறது. இதில், குறைவான அளவு (0–9.9%), மிதமான அளவு (10–19.9%), தீவிரமான அளவு (19.9–34.9%), மிகத்தீவிரமான அளவு (35–49.9%), எச்சரிக்கை தரும் அளவு (ஐம்பதுக்கும் மேல்) எனக் கணக்கிடப்படுகிறது. இதில், இந்தியா 30.3% புள்ளிகளுடன் தீவிரமான அளவு என்ற நிலையில் உள்ளது.

**3.நடப்பாண்டில் வரும் உலக உணவு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) #FamilyFarming

**B) #ZeroHunger World ☑**

C) #FeedingWorld

D) #FoodPrices - from crisis to stability




✓ அக்.16 அன்று ஐ.நா அவையின் ஐ.நா உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த நாளை நினைவுகூரும் வகையில், நாம் உயிர் வாழ அத்தியாவசியமான உணவைச் சிறப்பிக்கும் பொருட்டு கடந்த 1979ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற ஐ.நா'இன் இருபதாவது பொது மாநாட்டில் உலக உணவு நாளாக (World Food Day) அந்நாள் பேரறிவிப்பு செய்யப்பட்டது. "நமது செயல்களே நமது எதிர்காலம்: பசியற்ற உலகுக்கான நலம்மிக்க உணவுகள் – Our Actions Are Our Future, Healthy Diets for A #ZeroHunger World" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**4.உணவு பாதுகாப்பு மித்ரா என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?**

A) செஞ்சிலுவைச் சங்கம்

**B) FSSAI ☑**

C) இந்திய மருத்துவ கவுன்சில்

D) NCHRH

✓ நடப்பாண்டு உலக உணவு நாளை முன்னிட்டு, மத்திய அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன் 'உணவு பாதுகாப்பு மித்ரா – Food Safety Mitra' என்னும் திட்டத்தை தொடங்கிவைத்தார். FSM என்பது இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (FSSAI) சான்றளிக்கப்பட்ட ஒரு தொழில்முறை தனிநபராவார். அவர் FSS சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகிய மூன்றனுக்கு இணங்க டிஜிட்டல் மித்ரா, பயிற்சி மித்ரா மற்றும் சுகாதார மித்ரா உள்ளிட்ட மூன்று பாத்திரங்களில் உதவுகிறார்.

✓ ஆய்வில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யும் நோக்கில், FSSAI ஊழியர்களுக்கு அடையாளம் ஒன்றை வழங்குவதற்காக "Eat Right Smart Jacket" என்றவொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு RFID குறிச்சொல் & QR குறியீட்டைக் கொண்டு உட்பொதிக்கப்பட்டுள்ளது. ஆய்வு ஊழியர்களின் நுழைவை சரிபார்ப்பதற்காக இது ஒரு மென்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**5. 'FD ஹெல்த்' என்னும் புதிய நிலைவைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள வங்கி எது?**

A) பாரத ஸ்டேட் வங்கி

**B) ஐசிஐசிஐ வங்கி ☑**

C) ஹெச்டிஎஃப்சி வங்கி

D) ஆக்ஸிஸ் வங்கி



✓ ஐசிஐசிஐ வங்கியானது 'FD ஹெல்த்' என்னும் ஒரு புதிய நிலைவைப்புத்தொகை திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இது, அதன் வாடிக்கையாளர்களுக்கு ICICI லோம்பார்ட் பொது காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து ₹.1 இலட்சம் மதிப்புடைய எதிர்பாராத விதமான நோய்த் தாக்குதலுக்கான இலவச காப்பீட்டை வழங்குகிறது. குறைந்தபட்சம் ஈராண்டுகளுக்கு ₹.2 முதல் 3 இலட்சம் வரை கொண்ட நிலைவைப்புக் கணக்கை தொடங்கும் வாடிக்கையாளருக்கு இது கிடைக்கும்.

✓ 'FD ஹெல்த்' முதலீட்டாளர்களுக்கு, ஐசிஐசிஐ வங்கி, முதலாம் ஆண்டிற்கான காப்பீட்டுத் தொகையை இலவசமாகவே செலுத்தும். அதன்பிறகு வாடிக்கையாளர்கள் அதனை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**6. 'ஷின்யூ மைத்ரி' என்னும் இந்தியா–ஜப்பான் இடையேயான வான்படைப் பயிற்சியானது எந்த மாநிலத்தில் தொடங்கியுள்ளது?**



A) ஜம்மு மற்றும் காஷ்மீர்

B) கர்நாடகா

**C) மேற்கு வங்கம் ☑**

D) இராஜஸ்தான்

✓ இந்திய விமானப்படை மற்றும் ஜப்பானிய விமான தற்காப்புப் படை ஆகியவற்றுக்கு இடையிலான 'ஷின்யூ மைத்ரி' என்னும் கூட்டு இராணுவ பயிற்சியானது அக்.17 முதல் 23 வரை பனகர் நகரிலுள்ள அர்ஜன் சிங் விமானநிலையத்தில் நடைபெறவுள்ளது. இருநாட்டுப் படைகளுக்கிடையேயான கூட்டு இயக்கம் மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்திக்கொள்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

**7. உயிரி எரிபொருள் ஆராய்ச்சியை அதிகப்படுத்துவதற்காக 'ExxonMobil' உடன் ஒப்பந்தம் செய்துள்ள IIT எது?**

**A) ஐஐடி மெட்ராஸ் ☑**

B) ஐஐடி இந்தூர்

C) ஐஐடி மும்பை

D) ஐஐடி கான்பூர்

✓ மெட்ராஸ் IIT நிறுவனமானது எக்ஸான்மொபில் ஆராய்ச்சி மற்றும் பொறியியல் நிறுவனத்துடன் (EMRE) ஆற்றல் மற்றும் உயிரி எரிபொருள்கள் குறித்த ஆராய்ச்சிக்காக கூட்டுசேர்ந்துள்ளது. 5 ஆண்டுகால நீண்ட இந்தக் கூட்டு – ஆராய்ச்சி ஒப்பந்தம் உயிரி எரிபொருள்கள், தரவு பகுப்பாய்வு, வாயு மாற்றம் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. மேலும் இது, குறைந்தளவே நச்சுக்களை உமிழும் எரிபொருளைக் கண்டறியும் நோக்கம் கொண்டுள்ளது.

**8.நடப்பாண்டில் வரும் சர்வதேச கைகழுவும் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**A) Clean Hands for All ☑**

B) Make handwashing a habit

C) Our hands, our future

D) Clean hands - a recipe for health



✓ உலக மக்களிடையே கைகழுவும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.15 அன்று சர்வதேச கைகழுவும் நாள் அனுசரிக்கப்படுகிறது. நோயைத் தடுக்கும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக இருக்கும் வழலைக்கட்டியைப் (soap) பயன்படுத்தி கையைக் கழுவும் பழக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான ஒரு பரப்புரை நாளாகவும் இது உள்ளது. "Clean hands for all" என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**9.இந்தியாவில், உலகப்புகழ்பெற்ற KHON இராம்லீலாவின் முதல் பயிற்சி மற்றும் நிகழ்த்துதலை (Training and Performance) நடத்த முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

A) இராஜஸ்தான்

B) மத்தியபிரதேசம்

**C) உத்தரபிரதேசம் ☑**

D) ஹிமாச்சலபிரதேசம்



✓ இந்தியாவில், உலகப்புகழ்பெற்ற KHON இராம்லீலாவின் முதல் பயிற்சி மற்றும் நிகழ்த்துதலை நடத்த உத்தரபிரதேச மாநில அரசின் கலாசாரத் துறை முடிவு செய்துள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான கலாசார பரிமாற்ற திட்டத்தின் ஒருபகுதியாக, அம்மாநிலத்தின் கலைஞர்கள், தாய்லாந்து கலைஞர்களி –டம் பயிற்சிபெறுவார்கள். பின்னர், அக்.26 அன்று அயோத்தியில் நடத்தப்படும் பிரம்மாண்ட தீபோத்சவ விழாவில் அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்துவார்கள்.

✓ தாய்லாந்தின் KHON இராம்லீலா, UNESCO'இன் தொட்டுணர முடியாத கலாசார பாரம்பரியத்தின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இது, இராம்லீலாவின் காட்சிகளை சித்தரிக்கும் ஒரு முகமூடி நடனம். இதற்கென பிரத்யேகமாக எந்த வசனமுமில்லை, பின்னணியில் வரும் குரல்களே இராமாயணத்தின் முழு கதையையும் விவரிக்கின்றன. KHON இராம்லீலா அதன் அழகான உடை மற்றும் தங்க முகமூடிகளுக்கு பிரபலமானதாகும்.

**10.ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 200 இரன்கள் எடுத்த இளம்வயது கிரிக்கெட் வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால், எந்த நகரத்தைச் சேர்ந்தவர்?**

**A) மும்பை ☑** B) இராஞ்சி

C) கான்பூர் D) நாக்பூர்



- ✓ மும்பையைச் சேர்ந்த 17 வயதான இளைஞர் யஷஸ்வி ஜெய்ஸ்வால், A பட்டியல் மற்றும் ஒருநாள் உள்ளிட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட்டில் இரட்டைச்சதம் அடித்த உலகின் மிக இளவயது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

- ✓ கர்நாடகாவின் ஆலூரில் நடைபெற்று வரும் விஜய் ஹசாரே கோப்பைக்கான போட்டியில் ஜார்கண்ட் அணிக்கு எதிராக 154 பந்துகளில் 203 ரன்கள் எடுத்தார். எலைட் குரூப் ஏ போட்டியில், ஜார்கண்ட் அணிக்கு மும்பை அணி 359 என்ற மகத்தான இலக்கை நிர்ணயிக்க அவரது விறுவிறுப்பான இன்னிங்ஸ் உதவியது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ நான்காவது காவல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தலைவராக ஓய்வுபெற்ற IAS அதிகாரி ஷீலா பிரியா நியமிக்கப்பட்டுள்ளார். காவலர்களின் குறைகளைப் போக்கவும், காவல்துறையில் சீர்திருத்தங்களை கொண்டுவரவும், 4ஆவது காவல் ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. ஷீலா பிரியா, காவல் ஆணையத்திற்கு தலைவராக நியமிக்கப்பட்ட முதல் பெண்ணாவார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் நடத்தப்பட்ட 20ஆவது கால்நடை கணக்கெடுப்பு–2019இன்படி, எம்மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான கால்நடைகள் உள்ளன?**

A) ஜார்க்கண்ட்

B) இராஜஸ்தான்

**C) உத்தர பிரதேசம் ☑**

D) மத்திய பிரதேசம்



- ✓ கால்நடைப் பராமரிப்பு & பால்வளத்துறையானது அண்மையில் 20ஆவது கால்நடை கணக்கெடுப்பு – 2019 குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட இந்தக்கணக்கெடுப்பின்படி, இந்தியாவில், கால்நடைகளின் எண்ணிக்கை 535 மில்லியன் எண்ணிக்கைக்கும் அதிகமாக உள்ளது. இது, 2012இல் நடத்தப்பட்ட கால்நடை கணக்கெடுப்பைக்காட்டிலும் 4.6 சதவீதம் அதிகமாகும்.
- ✓ மாநிலங்களில், 67.8 மில்லியன் கால்நடை எண்ணிக்கையுடன் உத்தரபிரதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்த இடங்களில் இராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் உள்ளன. கால்நடை கணக்கெடுப்பானது 1919ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது நடத்தப்ப –ட்டு வருகிறது. இந்தக் கால்நடை கணக்கெடுப்பு பொதுவாக வீட்டில் வளர்க்கப்படும் அனைத்து விலங்குகளையும் உள்ளடக்கியது. இந்த 20ஆவது கால்நடை கணக்கெடுப்பு, நாடு முழுவதும் சுமார் 6.6 இலட்சம் கிராமங்கள் மற்றும் 89,000 நகர வார்டுகளில் மேற்கொள்ளப்பட்டது.

**2.ஷிருய் லில்லி விழாவை கொண்டாடும் மாநிலம் எது?**

A) திரிபுரா

B) அருணாச்சல பிரதேசம்

C) மிசோரம்

**D) மணிப்பூர் ☑**



- ✓ வடகிழக்கு மாநிலமான மணிப்பூர், அக்.16–19 வரை மாநில அளவில் நடைபெறும் மூன்றாவது ஷிருய் லில்லி விழாவை நடத்துகிறது. இந்த விழாவை மணிப்பூரில் உள்ள உக்ருலின் ஷிருய் வேங்கையன் மைதானத்தில், சுற்றுலா மற்றும் கலாசாரத்துறை அமைச்சர் பிரகலாத்சிங் படேல் தொடங்கிவைத்தார்.
- ✓ அழிவின் விளிம்பிலிருக்கும் ஷிருய்லில்லியின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், உக்ருல் மாவட்டத்தை மணிப்பூர் மாநிலத்தின் ஒரு சுற்றுலாத்தலமாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு மணிப்பூர் மாநில சுற்றுலாத்துறையால் இந்த விழா நடத்தப்படுகிறது.

**3.இந்தியாவுக்கும் எந்த நாட்டுக்கும் இடையே 'ஈஸ்டன் பிரிட்ஜ்–V' என்னும் கூட்டுப் பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது?**



**A) ஓமன் ☑**

B) ஜோர்டான்

C) ஐக்கிய அரபு அமீரகம்

D) குவைத்

✓ இந்திய விமானப்படை தனது "ஈஸ்டன் பிரிட்ஜ்–V" என்னும் இருதரப்பு கூட்டுப் பயிற்சியை இராயல் ஓமன் விமானப்படையுடன் இணைந்து அக்டோபர்.17 அன்று ஓமனில் உள்ள விமானப்படைத் தளமான மசிராவில் தொடங்கியுள்ளது. அக்.26 வரை இந்தப் பயிற்சி நடைபெறும். MiG–29 போர் விமானமானது இந்தியாவுக்கு வெளியே ஒரு சர்வதேச பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதல்முறையாகும்.

**4.எந்த நாட்டில், மெய்ஞானத் துறவியான பகிர் லலோன் ஷாவின் 129ஆவது நினைவு ஆண்டு அனுசரிக்கப்பட்டது?**



**A) வங்கதேசம் ☑**

B) பாகிஸ்தான்

C) இந்தியா

D) இலங்கை

✓ அக்.17 அன்று வங்கதேசத்தில், மெய்ஞானத் துறவியான பகிர் லலோன் ஷாவின் 129ஆவது நினைவு ஆண்டு அனுசரிக்கப்பட்டது. லலோன் அகாதமி மற்றும் வங்கதேசத்தின் கலாசார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக உள்நாடு மற்றும் அயல்நாடுகளைச் சேர்ந்த லலோனின் சீடர்கள் அவரது சன்னதியில் கூடினர்.

✓ எழுத்துப்பூர்வ குறிப்புகள் எதுவுமில்லை என்றாலும் அவர் 1774இல் பிறந்ததாக நம்பப்படுகிறது. அவர், 1890இல் காலமானார். அவரது பாடல்கள் மதம், சாதி மற்றும் மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட மனிதநேயம், அன்பு மற்றும் சமத்துவம் குறித்து பேசுகின்றன. அவரது சமகாலத்தைச்சேர்ந்த குருதேவ் இரவீந்திரநாத் தாகூர், அவரது சில பாடல்களை படியெடுத்து வெளியிட்டுள்ளார்.

**5.சர்வதேச வறுமை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

A) அக்டோபர் 15 **B) அக்டோபர் 17 ☑**

C) அக்டோபர் 18 D) அக்டோபர் 16

INTERNATIONAL DAY for the ERADICATION of POVERTY 17 OCTOBER

✓ உலகளாவிய ரீதியில் குறிப்பாக வளரும் நாடுகளில் வறுமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி பசிப் பிணியிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக சர்வதேச வறுமை ஒழிப்பு நாளானது ஆண்டுதோறும் அக்.17 அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. "Acting Together to Empower Children, their Families and Communities to End Poverty" என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

**6. 2019 ஹுருன் குளோபல் யூனிகான் பட்டியலில் இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

A) முதலாவது B) இரண்டாவது

**C) மூன்றாவது ☑** D) நான்காவது

✓ ஹுருன் ஆராய்ச்சி நிறுவனம் தனது முதல் ஹுருன் குளோபல் யூனிகான் பட்டியலை நடப்பாண்டில் வெளியிட்டுள்ளது. இது 2000ஆம் ஆண்டுகளில் நிறுவப்பட்ட உலகின் பில்லியன் டாலர் மதிப்பிலான தொழில்நுட்ப 'துளிர் நிறுவனங்களின்' தரவரிசையாகும். இப்பட்டியலில் சீனா 206 யூனிகான்களுடன் முதலிடத்தையும், அமெரிக்கா 203 யூனிகான்களுடன் இரண்டாமிடத்தையும் பிடித்துள்ளது.

✓ கொடுப்பனவு தீர்வுகள் தளமான ஒன்97 கம்யூனிகேஷன்ஸ் ($10 பில்லியன்) மற்றும் வாடகையுந்துகள் ஒருங்கிணைப்பாளரான ஓலா கேப்ஸ் ($6 பில்லியன்); ஆன்லைன் கல்வியாளரான பைஜூஸ் ($6 பில்லியன்) மற்றும் பயணத்தின்போது இருப்பிடத்தைக் கண்டறிய உதவும் OYO அறைகள் ($5 பில்லியன்) உள்ளிட்ட 21 யூனிகான்களுடன் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

**7. நஷ்ரி சுரங்கம் அமைந்துள்ள மாநிலம் எது?**

A) உத்தரகண்ட்

**B) ஜம்மு & காஷ்மீர் ☑**

C) ஹிமாச்சல பிரதேசம்

D) சிக்கிம்



✓ இந்தியாவின் மிக நீளமான செனானி–நஷ்ரி சாலை சுரங்கப்பாதைக்கு பாரதிய ஜனசங் நிறுவனர் Dr. ஷியாமா பிரசாத் முகர்ஜியின் பெயர்சூட்டப்பட்டுள்ளது. இது NH44இல் அமைந்துள்ள 9.2 கிமீ நீளமுள்ள சுரங்கப்பாதையாகும். இது, ஜம்மு & ஸ்ரீநகர் இடையேயான தூரத்தை 31 கிமீ வரை குறைக்கிறது.

**8. நடப்பாண்டின் இந்தோ – பிரெஞ்சு அறிவு உச்சிமாநாடு நடைபெற்ற நகரம் எது?**

A) தில்லி

B) பாரிஸ்

**C) லியோன் ☑**

D) புனே

✓ இந்தோ–பிரெஞ்சு அறிவு உச்சிமாநாட்டின் 2ஆவது பதிப்பு, அக்.17–18 ஆகிய தேதிகளில் பிரான்சில் உள்ள லியோன் பல்கலைக்கழகத்தில் நடந்தது. இது உயர்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பிரான்ஸ் தூதரகமானது அறிவியல் மற்றும் தொழினுட்ப அமைச்சகம் மற்றும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்துடன் இணைந்து இந்த உச்சிமாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது.

**9.எந்தப் புகழ்பெற்ற ஆளுமையின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் உலக மாணவர் நாள் கொண்டாடப்படுகிறது?**

A) பால கங்காதர திலகர்

B) அன்னை தெரசா

**C) APJ அப்துல் கலாம் ☑**

D) லாலா லஜபதி ராய்



✓ இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவரும் சிறந்த அறிவியலாளருமான Dr APJ அப்துல் கலாமின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.15 அன்று உலக மாணவர் நாள் கொண்டாடப்படுகிறது. அவர், 2002 – 2007 வரை இந்தியாவின் 11ஆவது குடியரசுத்தலைவராக பணியாற்றினார். இந்தியாவின் விண்வெளி திட்டம் மற்றும் இராணுவ ஏவுகணை அமைப்புகளுக்காக பெரிதும் பாராட்டப்பட்ட அவர் 'மக்களின் குடியரசுத்தலைவர்' எனப் பரவலாகக் குறிப்பிடப்பட்டார்.

**10.உலகின் முதல் பட்டப்படிப்பு அளவிலான, ஆராய்ச்சி அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகத்தை நிறுவுவதாக அறிவித்துள்ள அரபு நாடு எது?**

A) ஓமன்

B) ஜோர்டான்

C) இஸ்ரேல்


**D) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

✓ மொகமத் பின் சையீத் செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகம் என்னும் உலகின் முதல் பட்டப்படிப்பு அளவிலான, ஆராய்ச்சி அடிப்படையிலான செயற்கை நுண்ணறிவு பல்கலைக்கழகத்தை நிறுவுவதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது.

✓ இந்தப் பல்கலைக்கழகம் பட்டதாரி மாணவர்கள், வணிகங்கள் மற்றும் அரசாங்கங்களை செயற்கை நுண்ணறிவு துறையில் முன்னேற்றமடைய உதவும். அபுதாபியின் இளவரசரும் ஐக்கிய அரபு அமீரக ஆயுதப்படைகளின் துணைத் தளபதியுமான ஷேக் மொகமத் பின் சையீத் அல் நயானின் பெயரால் இப் பல்கலைக்கழகம் அழைக்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. NITI ஆயோக்கின் முதலாவது இந்திய புத்தாக்கக் குறியீட்டில் முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?**



A) மகாராஷ்டிரா

B) தெலுங்கானா

**C) கர்நாடகா ☑**

D) கேரளா

✓ மாநிலங்களிடையே போட்டித்தன்மையை ஊக்குவிக்கும் நோக்கில் முதல்முறையாக இந்திய புத்தாக்கக் குறியீட்டை (India Innovation Index) புது தில்லியில் வைத்து NITI ஆயோக் வெளியிட்டது. இக் குறியீட்டில், கர்நாடக மாநிலம் முதலிடத்திலும் அதைத்தொடர்ந்த இடங்களில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா, தெலுங்கானா, ஹரியானா, உத்தர பிரதேசம், மேற்கு வங்கம், குஜராத் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களும் உள்ளன.

✓ 17 மாநிலங்கள் இடம்பெற்றுள்ள இந்தப் பட்டியலின் கடைசி இடத்தில் ஜார்க்கண்ட் மாநிலம் உள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் சிக்கிமும் யூனியன் பிரதேசங்களில் தில்லியும் முதல் இடத்தைப் பிடித்தன

**2.தனியார் கல்வித்துறையில், பேறுகால பயன்களை வழங்கவுள்ள முதல் இந்திய மாநிலம் எது?**

A) மகாராஷ்டிரா

B) தெலுங்கானா

C) கர்நாடகா

**D) கேரளா ☑**



The Maternity Benefits Act, 1961

✓ மகப்பேறு நலச்சட்டத்தின்படி, தனியார் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியைகள், பேராசிரியைகள் மற்றும் பெண் ஊழியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்கும் கேரள மாநில அரசின் முடிவுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுபோன்ற நடைமுறை நாட்டிலேயே முதல்முறையாக கேரளத்தில்தான் நடைமுறைக்கு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

✓ இதன்படி, கேரளாவில் அரசு ஊழியர்கள் மட்டுமில்லாது தனியார் பள்ளி ஆசிரியைகள், தனியார் கல்லூரி பேராசிரியைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவன அனைத்து பெண் ஊழியர்களுக்கும் 26 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்கப்படும். அதுமட்டுமின்றி குழந்தை பிறக்கும் வரை மாதம் ₹1000 உதவித்தொகையாக வழங்கப்படும் என்று கேரள மாநில அரசு தெரிவித்துள்ளது.

**3.துலாகி தீவு, எந்த நாட்டின் பிரதேசம்?**

A) கிரிபதி **B) சாலமன் ☑**

C) துவாலு D) நௌரு



- ✓ சீன நிறுவனமான "சாம் எண்டர்பிரைஸ் குழுமம்", முழு துலாகி தீவையும் 75 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதற்காக சாலமன் தீவு அரசாங்கத்துடனான ஒரு இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. குத்தகையின் நிலை குறித்த தெளிவான தகவல் எதுவும் இல்லை.

- ✓ சாலமன் தீவுகள் தைவானை விடுத்து, சீனத்தின் உதவி மற்றும் முதலீட்டைப் பயன்படுத்துவதை அலுவல் ரீதியாக அங்கீகரிக்கத் தொடங்கிய சில நாட்களிலேயே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆஸ்திரேலியாவுக்கான ஓர் உத்திசார் நுழைவாயிலில் பசிபிக் இராணுவ தளத்தை நிறுவுவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். துலாகி தீவு, முதலில் பிரிட்டனுக்கும் பின்னர் ஜப்பானுக்கும் தென் பசிபிக் தலைமையகமாக செயல்பட்டு வந்தது. இது ஒரு முன்னாள் ஜப்பானிய கடற்படைத் தளமும் இரண்டாம் உலகப்போரில் கடுமையாக போர் நடந்த இடமுமாகும்.

**4.அண்மையில், தொடர்புகள் ஏதுமற்ற அலைபேசி கொடுப்பனவு வசதியை (contactless mobile phone payments facility) அறிமுகப்படுத்திய வங்கி எது?**

**A)** பாரத ஸ்டேட் வங்கி (SBI) ☑

B) ஐசிஐசிஐ வங்கி

C) ஹெச்டிஎஃப்சி வங்கி

D) பரோடா வங்கி

- ✓ SBI கார்ட் ஆனது விற்பனை முனையங்களில் அலைபேசிகளைப் பயன்படுத்தி தொடர்பு ஏதுமற்ற கொடுப்பனவுகளை மேற்கொள்ள அனுமதிக்கும் 'SBI கார்ட் பே' வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. 'SBI கார்ட் பே'ஐப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்கள் மெய்யான கடனட்டையைப் பயன்படுத்தாமலும் எந்த விதமான PINஐ உள்ளிடாமலும் தங்கள் அலைபேசியில் உள்ள அண்மைக் கள தொடர்பாடல் (NFC) வசதியை இயக்குவதன் மூலம் விற்பனை முனையங்களில் தொடர்பு ஏதுமற்ற கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

- ✓ 'SBI கார்ட் பே' என்பது அலைபேசிகளைப் பயன்படுத்தி விரைவான, வசதியான மற்றும் பாதுகாப்பான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக 'Host Card Emulation (HCE)' என்னும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஒரு கொடுப்பனவு செலுத்தும் அம்சமாகும்.

**5.காற்றுமாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக 'PM 2.5' கருவியைக் கண்டுபிடித்துள்ள தேபயன் சஹா, எந்த IITஇல் பட்டம் பெற்றவர்?**

**A)** ஐஐடி கரக்பூர் ☑



B) ஐஐடி பம்பாய்

C) ஐஐடி தில்லி

D) ஐஐடி இந்தூர்

- ✓ IIT கரக்பூரைச் சேர்ந்த எந்திர பொறியியல் பட்டதாரி தேபயன் சஹா, "PM 2.5" என்ற சாதனத்தை கண்டுபிடித்துள்ளார். இது, வாகனங்களில் புகைபோக்கிக் குழாயின் அருகே பொருத்தப்படும்போது காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

- ✓ அவர் உருவாக்கிய இந்தத் தொழில்நுட்பம், மின்னாற்றல் மற்றும் அலையாற்றலின் கலவையைப் பயன்படுத்தி PM 2.5 போன்ற மாசுபடுத்திகளை ஈர்க்கிறது. ஒரு காந்தத்தைப்போல செயல்படும் அவை, சுற்றுப்புற வளிமண்டலத்திலிருந்து பிற துகள் போன்ற மாசுபடுத்திகளையும் ஈர்க்கின்றன. ஈர்க்கப்பட்ட துகள்களினால் அவை அளவு பெரிதாகும்போது, கனமாகி மண்ணைப் போல தரையில் பாதுகாப்பாக விழுந்துவிடும்.

**6. 2019 உலக கொடுத்தல் குறியீட்டில் (World Giving Index) இந்தியாவின் தரநிலை என்ன?**

A) 75ஆவது

**B) 82ஆவது ☑**

C) 73ஆவது

D) 97ஆவது

82

- ✓ Charities Aid Foundation (CAF) ஆய்வுசெய்த 2019 உலக கொடுத்தல் குறியீட்டில், 128 நாடுகளுள் இந்தியா 82ஆவது இடத்திலுள்ளது. கடந்த தசாப்தத்தில் இந்தியாவுக்கான சராசரி புள்ளிவிவரங்கள், 34% பேர் ஓர் அந்நியருக்கு உதவியதாகவும், 24% பேர் பணத்தை நன்கொடையாக அளித்ததாகவும், 19% பேர் தங்களின் நேரத்தை தாமாக முன்வந்தோ அல்லது நன்கொடையாகவோ அளித்ததாக காட்டுகின்றன. இந்தக் குறியீட்டில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து மியான்மர், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன.

**7. YSR ரைத்து பரோசா–பிரதமர் கிசான் யோஜனாவை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) ஹிமாச்சல பிரதேசம்

B) தமிழ்நாடு

C) கேரளா

**D) ஆந்திர பிரதேசம் ☑**



- ✓ ஆந்திர பிரதேச முதலமைச்சர் Y S ஜகன்மோகன் ரெட்டி YSR ரைத்து பரோசா – பிரதமர் கிசான் சம்மன் யோஜனாவை நெல்லூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். இந்தப் பயிர் முதலீட்டு ஆதரவு திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு மூன்று தவணைகளில் ஆண்டுக்கு ₹13,500 (மாநில அரசின் பங்களிப்பாக ₹7,500 + மத்திய அரசின் பங்களிப்பாக ₹6,000) நிதியுதவி கிடைக்கும். ஆளும் YSR காங்கிரஸ் கட்சி தனது அறிக்கையில் அளித்த 9 முக்கிய வாக்குறுதிகளில் (நவரத்னலூ) ரைத்து பரோசாவும் ஒன்றாகும்.

**8.அண்மையில் காலமான கன்வர் சைன் ஜாலி, எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?**

**A) இதழியல் ☑**

B) அரசியல்

C) கலை

D) அறிவியல்



✓ மூத்த இதழாளரான கன்வர் சைன் ஜாலி (86) குருகிராமில் காலமானார். இந்தியாவின் முதன்மை செய்தி நிறுவனமான பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவில் (PTI) 40 ஆண்டுகளாக பல்வேறு பதவிகளில் அவர் பணியாற்றியுள்ளார். 1993ஆம் ஆண்டில் PTI செய்தி நிறுவனத்தின் துணை பொது மேலாளராக பதவிவகித்து அவர் ஓய்வுபெற்றார்.


**9. "Dark Fear, Eerie Cities: New Hindi Cinema in Neo–liberal India" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

A) சித்ரா பானர்ஜி திவாகருணி

B) சேதன் பகத்

**C) சாருனாஸ் பாங்க்னிஸ் (Sarunas Paunksnis) ☑**

D) அஸ்வின் சங்கி




✓ "Dark Fear, Eerie Cities: New Hindi Cinema in Neo–liberal India" என்ற நூலை சாருனாஸ் பாங்க்னிஸ் எழுதியுள்ளார். 1990களின் முற்பகுதியில், நிலப்பிரபுத்துவ காலகட்டத்திலிருந்து காலனித்துவத்திற்கு பிந்தைய சூழலுக்கு மாறும் திரையுலக கற்பனையின் தத்துவம் மற்றும் மனோவியல் விமர்சனத்தை வழங்குவதற்காக இருபத்தியோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களுள் பெரும்பாலானவற்றை இந்நூல் பகுப்பாய்வு செய்கிறது.

**10. OASIS (Officers Automated & Structured Information System) மென்பொருளை அறிமுகம் செய்துள்ள இந்திய ஆயுதப்படை எது?**

**A) இந்திய இராணுவம் ☑**

B) இந்திய விமானப்படை

C) இந்திய கடற்படை

D) இந்திய கடலோர காவல்படை

✓ இந்திய இராணுவம், 'OASIS' (Officers Automated & Structured Information System) என்னும் தனது புதிய மென்பொருளை அறிமுகப்படுத்தியுள்ளது. இது இராணுவ அதிகாரிகளின் ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கத் தொடங்கியுள்ளது. இப்புதிய மென்பொருள், இராணுவத்தின் அக இணையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

✓ இராணுவ அதிகாரிகள் அவர்களின் விவரங்களைச் சரிபார்ப்பதற்காக இதனை அணுகலாம். சேவை ஆவணங்களைப் பார்க்கவும், கண்காணிப்புகளை தீவிரப்படுத்தவும் 'OASIS' அதிகாரிகளுக்கு உதவும். இது மாதாந்திர கணக்கு அறிக்கைகள், படிவம்–16 மற்றும் DSOP நிதி அறிக்கைகளை பார்வையிட்டு பதிவிறக்கம் செய்யவும் உதவுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

**A) அனுப் சிங் ☑**



B) K L தில்லான்

C) வெங்கடேஷ் பிரசாத்

D) பிரஞ்சல் குமார்

✓ தேசிய பாதுகாப்புப் படையின் (NSG) புதிய தலைமை இயக்குநராக அனுப் சிங் IPS (குஜராத்: 1985) நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் பதவியில் சேர்ந்த தேதி முதல் 2020 செப்.30 வரை நடப்பில் இருக்கும். உள்நாட்டு கலவரங்களுக்கு எதிராக மாநிலங்களைப் பாதுகாக்கும் நோக்கில் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்காக 1984 அக்.15 அன்று NSG உருவாக்கப்பட்டது.

**2. 91ஆவது இன்டர்போல் பொதுக்கூட்டத்தை, இந்தியா, எந்த ஆண்டில் நடத்தவுள்ளது?**

A) 2020

B) 2024

C) 2023

**D) 2022 ☑**

INTERPOL

✓ சிலியின் சாண்டியாகோவில் நடந்த இன்டர்போலின் 88ஆவது பொதுக்கூட்டத்தில், 91ஆவது கூட்டத்தை நடத்துவதற்கான முன்மொழிவுகளின் மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், இந்தியாவின் முன்மொழிவுக்கு உறுப்புநாடுகள் பெருவாரியாக ஆதரவளித்தன. இந்த வாக்கெடுப்பில் இந்தியா வென்றதையடுத்து 'இன்டர்போல்' பொதுச்சபையின் 91ஆம் கூட்டம் 2022ஆம் ஆண்டு தில்லியில் நடைபெறுகிறது.

✓ இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக 91ஆவது 'இன்டர்போல்' பொதுக்கூட்டம் நடைபெறும். பிரான்சின் லியோனை தளமாகக்கொண்ட 'இன்டர்போல்', 194 உறுப்புநாடுகளையும், சர்வதேச அளவில் காவல்துறை ஒத்துழைப்பின் 100 ஆண்டுகால அனுபவத்தையும் கொண்டுள்ளது. இந்த அமைப்பு 17 தரவுத்தளங்களில் சுமார் 90 மில்லியனுக்கும் அதிகமான ஆவணங்களைக் கொண்டுள்ளது.s

**3.அண்மையில் காலமான காளிதாஸ் கர்மாகர், எந்த நாட்டைச் சார்ந்த புகழ்பெற்ற ஓவியராவார்?**

A) இலங்கை



**B) வங்கதேசம் ☑**

C) இந்தியா

D) நேபாளம்

✓ வங்கதேசத்தைச் சேர்ந்த பன்னாட்டளவில் புகழ்பெற்ற ஓவியர் காளிதாஸ் கர்மாகர் (73), டாக்காவில் அக்.18 அன்று காலமானார். காளிதாஸ் தனக்கே உரிய கலைபாணிக்காக சிறந்து விளங்கியவர். அவர் தனது படைப்புகளை 'வண்டல் கலை' என அழைத்தார். அதற்கு, 'டெல்டா நிலத்தின் கலை' எனப் பொருள். அது, வண்டல் நிலப்பரப்பையும் அங்கு வாழும் மக்களையும் அவர்களின் இன்னல்களையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துகிறது.

**4. பாலியாத்ரா என்பது எந்த மாநிலத்தின் மிகப்பெரிய வர்த்தக கண்காட்சிகளில் ஒன்று?**

**A) ஒடிசா ☑**

B) கர்நாடகா

C) மகாராஷ்டிரா

D) ஜார்கண்ட்



✓ 'பாலியாத்ரா' என்பது ஒடிசாவின் மிகப்பெரிய வர்த்தக கண்காட்சிகளில் ஒன்றாகும். அது, நவ.12 அன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. 8 நாட்கள் நடைபெறும் இந்த வர்த்தக கண்காட்சியை கட்டாக் மாவட்ட நிர்வாகம், மாவட்ட கலாசார கவுன்சில் மற்றும் கட்டாக் மாநகராட்சி ஆகியவை இணைந்து நடத்தும்.

**5.வாஷிங்டனில் நடந்த G20 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில், இந்திய தூதுக்குழுவை வழிநடத்தியது யார்?**

A) நரேந்திர மோடி

B) இராஜ்நாத் சிங்

C) பியூஸ் கோயல்

**D) நிர்மலா சீதாராமன் ☑**



✓ வாஷிங்டனில் நடைபெற்ற G20 & BRICS நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டத்தில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையிலான இந்தியக் குழு கலந்துகொண்டது. நிதியமைச்சர் தலைமையிலான இந்தக் குழு, வாஷிங்டனில் நடைபெற்றுவரும் சர்வதேச செலாவணி நிதியம் மற்றும் உலக வங்கியின் ஆண்டுக்கூட்டத்திலும் பங்கேற்றது.

✓ G20 நாடுகளின் நிதியமைச்சர்கள் & மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில், உலகப் பொருளாதாரம் தற்போது சந்தித்து வரும் சவால்கள் குறித்தும், இதனைக் குறைப்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.


**6.நடப்பாண்டின் அணுவாற்றல் மாநாடு நடைபெற்ற நகரம் எது?**

A) கொச்சின்

B) இலடாக்

**C) புது தில்லி ☑**

D) பெங்களூரு



✓ புது தில்லியில் நடந்த 11ஆவது அணுவாற்றல் மாநாட்டை மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார். "அணுவாற்றலின் பொருளாதாரம்: பாதுகாப்பான மற்றும் மலிவுவிலை தொழில்நுட்பங்களை நோக்கிய கண்டுபிடிப்புகள் – Economics of Nuclear Power– Innovation towards Safer & Cost–Effective Technologies" என்பது இந்த மாநாட்டுக்கான கருப்பொருளாகும். இதனை இந்திய ஆற்றல் மன்றம் (India Energy Forum) ஏற்பாடு செய்திருந்தது.

**7. "Mind Master: Winning Lessons from a Champion's Life" என்னும் நூலை எழுதியவர் யார்?**

A) அபிநவ் பிந்த்ரா

B) அஞ்சு பாபி ஜார்ஜ்

**C) விஸ்வநாதன் ஆனந்த் ☑**

D) ஜீவ் மில்கா சிங்




✓ "Mind Master: Winning Lessons from a Champion's Life" என்னும் நூலை சதுரங்க விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த் எழுதியுள்ளார். ஆனந்த் தனது மிகப்பெரிய போட்டிகளையும் மோசமான தோல்விகளையும், சிறந்த போட்டியாளர்களுக்கு எதிரான அவரது தனித்துவமான அனுபவங்களையும், வெற்றிகளுக்காக தயாராவதற்கும், ஏமாற்றங்களைக் கையாள்வதற்கும் அவர் பயன்படுத்தும் முறைகள் ஆகியன குறித்து இந்நூலினூடாக திரும்பிப் பார்க்கிறார்.

**8. ஐரோப்பிய மத்திய வங்கியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A) டேகிகோ நகாவோ

B) அன்டோனியோ குடெரெஸ்

C) கிறிஸ்டாலினா ஜார்ஜீவா

**D) கிரிஸ்டைன் லகார்ட் (Christine Lagarde) ☑**



✓ சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவரான் கிறிஸ்டைன் லகார்ட், ஐரோப்பிய மத்திய வங்கியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மரியோ திராகிக்குப்பின் (இத்தாலி) இப்பதவிக்கு வரவுள்ள அவர் நவ.1 அன்று பொறுப்பேற்றுக்கொள்வார். ஜூலை.2 அன்று ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களால் இந்தப் பதவிக்கு அவர் பரிந்துரைக்கப்பட்ட பின்னர், மீண்டும் புதுப்பிக்க இயலாத 8 ஆண்டு காலத்திற்கு அவர் உறுதியாக இப்பதவியில் இருப்பார்.

**9. இந்திய ஆயுதப்படையின் எந்தப் படைப்பிரிவின் கீழ், 'DANX–19' நடத்தப்பட்டுள்ளது?**

**A) அந்தமான் & நிக்கோபார் படைப்பிரிவு ☑**

B) தென்மேற்குப் படைப்பிரிவு

C) இராணுவப் பயிற்சிப் படைப்பிரிவு

D) தெற்குப் படைப்பிரிவு



- ✓ Defence of Andaman and Nicobar Islands Exercise (DANX–19)'இன் 2ஆவது பதிப்பானது அந்தமான் & நிக்கோபார் படைப்பிரிவின் தலைமையின் கீழ், அக்.14–18 வரை நடத்தப்பட்டது. 5 நாள் நடைபெற்ற இந்தப் பயிற்சியானது இந்திய இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் கடலோர காவல்படை ஆகியவை பங்கேற்ற ஒரு பெரிய அளவிலான கூட்டுப் பயிற்சியாகும். தீவைப் பாதுகாப்பதும், தீவுகளை கட்டுக்குள் வைப்பதுமே இப்பயிற்சியின் நோக்கமாக இருந்தது.

### 10. சீனாவின் எந்நகரத்தில், உலக இராணுவ விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியுள்ளன?

A) ஹாங்க்சோ

B) பெய்ஜிங்

**C) வூகான் ☑**

D) ஷாங்காய்

WUHAN 2019
7th CISM Military World Games

- ✓ 7ஆவது உலக இராணுவ வீரர்கள் விளையாட்டுப் போட்டியின் தொடக்கவிழா, அக்.18 அன்று சீனாவின் வூகான் நகரத்தில் நடந்தது. "Military Glory and Peace" என்பது இப்போட்டிக்கான கருப்பொருளாகும். 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும், 'இராணுவ ஒலிம்பிக்' என அழைக்கப்படும் இந்தப் போட்டி, தொடங்கப்பட்ட 24 ஆண்டுகளில், முதல்முறையாக சீனாவில் தற்போது நடைபெறுகிறது.

- ✓ இதில், இந்தியா உட்பட 140க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 10,000க்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவது உலக இராணுவ வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளானது ரோமில் 1955இல் நடத்தப்பட்டது. அதன் பின்னர், இது, ஒவ்வொரு 4 ஆண்டுக்கும் ஒருமுறை சர்வதேச இராணுவ விளையாட்டு கவுன்சிலால் நடத்தப்படுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் குற்றங்களைச் சமாளிக்க, மாநிலத்தில் விரைவில் 40 சைபர் கிரைம் காவல் நிலையங்களும் ஆறு இணைய ஆய்வகங்களும் விரைவில் அமைக்கப்படவுள்ளன.
    - அமைக்கப்படும் சைபர் கிரைம் காவல் நிலையங்கள் மற்றும் ஆய்வகங்களில் அலைபேசிகள், சிம் அட்டைகள், மடிக்கணினிகள் மற்றும் வன்தகடுகள், கணினி அமைப்புகளை ஹேக்கிங் மற்றும் கண்காணிப்பதற்கான மென்பொருள், நீக்கப்பட்ட தகவல்களை மீட்டெடுப்பதற்கான நவீன வசதிகளைக் கொண்டிருக்கும்.
    - சைபர் கிரைம் காவல் நிலையங்கள் சைபர் கிரைம் வழக்குகளை கையாள்வதைத்தவிர, புதிய சைபர் உட்கட்டமைப்பு சைபர் குற்ற வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தேவையான டிஜிட்டல் ஆதாரங்களை சேகரிக்க இந்தக் காவல் நிலையங்கள் மற்றும் ஆய்வகங்கள் காவல்துறைக்கு உதவும்

---